சிவமயம்



# வரதன்
# நினைவஞ்சலி மலர்

09.05.2016

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருக்கோணமலை சமாது ஒழுங்கையைப்

பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட

உயர் சைவ வேளாளர் குலத்திலகர் பரராஜசிங்கம்

தனலட்சுமி தம்பதியினரின்

ஆறாவது அன்புப் புதல்வன்

**சுகிர்தா** அவர்களின் பாச கணவர்

**இளமாறன் இசைவிழி** ஆகியோரின் பாசத்தந்தை

## அமரர் பரராஜசிங்கம் வரதன்

அவர்களின்

# நினைவஞ்சலி மலர்

**09.05.2016**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

எமக்கு என்றும் உதவியாய்
இருந்து அமைதியின்
இருப்பிடமாய் அளவறிந்து
பேசும் அந்த ஆத்மாவுக்கு
இம் மலர்

- குடும்பத்தினர் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அமரர்
# பரராஜசிங்கம் வரதன்
# அவர்கள்

உளமகிழ
29.01.1969

உளநெகிழ
09.04.2016

## திதிவெண்பா

"ஆண்டு மன்மத அண்டிய நல் பங்குனி
தோன்று பூர்வ பக்ச திருதியை திதியன்று
சீராளர் பரராஜசிங்கம் வரதன் தனைமறந்து
பாராளும் மெய் சிவனடியே தான்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்சபுராணம்







விநாயகர் துதி

திருச்சிற்றம்பலம்

பிடியத னுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவர்இடர்
கடிகண பதி வர அருளினன் மிகு கொடை
வடிவினர் பயில்வலி வலமுறை இறையே

## தேவாரம்

கடிதென வந்த கரிதனை யுரித்து
அவ்வுரி மேனி மேற் போர்ப்பர்
பிடியென நடையாள் பெய்வளை மடந்தை
பிறைநுத லவளொடு முடனாய்க்
கொடிதெனக் கதறுங் குரைகடல் சூழ்ந்து
கொள்ளமும் நித்திலஞ் சுமந்து
குடிதனை நெருங்கிப் பெருக்கமாய்த் தோன்றுங்
கோணமா மலையமர்ந்தாரே

## திருவாசகம்

உடையாள் உன்றன் நடுவிருக்கும்
உடையாள் நடுவுள் நீயிருத்தி
அடியேன் நடுவுள் இருவீரும்
இருப்பதானால் அடியேனுன்
அடியார் நடுவுள் இருக்கும் அருளைப்
புரியாய் பொன்னம் பலத்தெம்
முடியா முதலே யென் கருத்து
முடியும் வண்ணம் முன்னின்றே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வு சூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள் மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

## திருப்பல்லாண்டு

சொல்லாண்ட சுருதிப்பொருள் சோதித்த
தாய்மனத் தொண்டருள்ளீர்
சில்லாண்டிற் சிதையுஞ் சிலதேவர்
சிறுநெறி சேராமே
வில்லாண்ட கனகத்திரண்மேரு
விடங்கன் விடைப் பாகன்
பல்லாண்டென் னும் பதங் கடந்தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே

## திருப்புராணம்

புன்னெறியதனிற் செல்லும் போக்கினை விலக்கிமேலாம்
நன்னெறியொழுகச் செய்துநவையறு காட்சி நல்கி
என்னையுமடியனாக்கி யிருவனை நீக்கியாண்ட
பன்னிருதடந்தோள் வள்ளல்பா தபங்கயங்கள் போற்றி

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேர்மையின் சிகரம்

வரதனைப்பற்றியும் அவர் வேலை செய்த நிறுவனத்தில் அவரின் நற்பண்புகளையும் அவருடைய குறுகிய வாழ்க்கை வரலாற்றை பற்றியும் சுருக்கமாக குறிப்பிடுகின்றேன்.

திரு. வரதன் எனக்கு அவரின் சகோதரியை திருமணம் செய்ததன் மூலமாக 1997 ஆம் ஆண்டில் அறிமுகமானார். நான் திருமணம் செய்யும் போது, அவர் இந்த மாவட்டத்தில் இல்லை. எனது மனைவி கீதா இது தான் எனது கடைசி அண்ணா என புகைப்படம் மூலமாக அறிமுகப்படுத்தினார்.

அதனைத்தொர்ந்து நீ வன்னி மாவட்டத்தில் மண்ணின் விடிவிற்காகவும் தமிழ் மக்களின் விடிவிற்காகவும் நடைபெற்றுக்கொண்டிருந்த ஓர் யுத்த களத்திற்குள் சிக்கி வாழ்ந்து கொண்டிருந்தாய். அந்த சோக நிகழ்வை என்னாலும் உனது சகோதரியாலும், உனது குடும்பத்தினராலும் தாங்கிக் கொள்ள முடியாமல், நாம் தீர்மானித்தோம், நீ திருகோணமலை மாவட்டத்திற்கு வரமுடியாத காரணத்தினால் அந்த மாவட்டத்திலேயே திருமணம் செய்து வைப்பதற்கு.

அதன் பிரகாரம் தான் குமுளமுனையை பிறப்பிடமாகக் கொண்ட சுகிர்தா சௌந்தரராஜா எனபவரை பேச்சுத்திருமணம் மூலமாக திருமணம் செய்ய உனது குடும்பத்தினர் தீர்மானித்தனர். அந்த நேரத்தில், வன்னி மாவட்டம் கட்டுப்பாட்டு பிரதேசமாக இருந்தபோது, எங்களுக்கு அங்கு வரமுடியாத ஒருநிலை இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உனது முயற்சியாலும் உன்னை அந்தநேரத்தில் வழிநடத்தி கொண்டிருந்தவர்களின் முயற்சியாலும் எங்களுக்கு முகமாலையூடான வன்னிக்கு செல்வதற்கு பாஸ் ஒழுங்குகள் செய்து தரப்பட்டதனால், 2005 ஆண்டில் நாங்கள் வந்த உனது திருமணத்தை செய்து வைத்தோம்.

அதனைத்தொடர்ந்து நீ இல்லற வாழ்க்கையில் சிலகாலம் சந்தோஷமாக வாழ்ந்து வந்தாய். உனக்கு அழகான ஒரு ஆண்குழந்தையும், ஒரு பெண்குழந்தையும் பிறந்ததாக தொலைபேசி மூலமாகத்தான் எங்களுக்கு தகவல் கிடைத்தது. குழந்தைகள் பிறந்து, சில மாதங்கள் ஆனதும் வன்னியில் இறுதிக்கட்டப்போர் ஆரம்பித்திருந்ததை நாம் அறிந்தோம்

அதிலும் நீ புதுமாத்தளன் பகுதியில் அகப்பட்டு சொல்லனாத்துயரங்கள் அனைத்தையும் நீயும் உனது மனைவியும், மனைவியின் சகோதரர்களும் உயிருக்காக போராடி, இறுதியில் ஆண்டவனின் கருணையுடன் வெளியேறி, வவுனியா முகாமிற்கு வந்ததை கேட்டு நாம் அந்தநேரம் மகிழ்ச்சியடைந்தோம்.

அங்கிருந்து உன்னையும், மனைவியையும், உனது இரண்டு குழந்தைகளையும் திருகோணமலை அலஸ்தோட்டம் அகதி முகாமிற்கு அனுப்பி வைத்திருந்தார்கள். நீ அங்கு வந்த பின்பு தான் எமக்குத்தெரியும்; நீ தப்பி பிழைத்து விட்டாய் என. இவ்வளவு கஷ்டங்களையும், துன்பங்களையும் அனுபவித்த நீ இதையும் கலங்கா நெஞ்சத்துடன் எத்தனை தொந்தரவுகளுக்கு மத்தியிலும் பயமில்லாது நீ திருகோணமலையில் உனது சொந்த ஊரில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்பத்தோடு வாழவிரும்பி உனது அத்தானின் நிறுவனமான றோயல் கொன்ஸ்ரக்ஷன் நிறுவனத்தில் 2009 ஆம் ஆண்டில் கடமைக்காக சேர்ந்து கொண்டாய்

சேர்ந்து கொண்ட காலத்தில் வன்னி மாவட்டத்தில், வசித்தவர்களை பொலிஸார் அடிக்கடி தொந்தரவு கொடுப்பதும், கூட்டிச்செல்வதும், விசாரணைகள் செய்வதுமாக நடைபெற்றுக்கொண்டிருந்தது. நீயோ, பயப்படாது உனது அத்தானின் நிறுவனத்தில் கம்பீரமாக வேலை செய்து கொண்டிருந்தாய். அதற்கு உனது அத்தான் பக்கபலமாக ஆறுதலையும், ஆலோசனை களையும் வழங்கி கொண்டிருந்தார்.

நீ இடையில் எனக்கு இங்கு இருக்க பயமாக இருக்கின்றது நான் சிலகாலம் இந்தியாவிற்கு செல்லவா என்றும், கேட்டாய் அதற்கு நான் கூறினேன் நான் இருக்கின்றேன் நீ ஒன்றுக்கும் யோசிக்க வேண்டாம் என்று இப்படி பயத்திற்கும் பீதிக்கும் இடையில் வாழ்ந்த நீ கடந்த 07 வருட காலமாக எமது நிறுவனத்திற்கு ஆற்றிய சாதானைகளோ பல.

உனது பிரதான வேலை சாரதியாக இருந்தாலும், நீ அதை மட்டும் செய்வதில்லை. ஒரு சாரதியாகவும், ஒரு மெக்கானிக்காகவும் ஒரு எலக்ரிசியன் ஆகவும், இதைவிட பல துறைகளிலும் எனது நிறுவனத்தில் கடமையாற்றி, பல பொறியியலாளர்கள், பல தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், ஏனைய சக உத்தியோகத்தர்கள் மத்தியிலும், ஒரு நேர்மையான வரதன் என்ற நற்பெயரை பெற்றிருந்தாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உனது மனைவி சுகிர்தா, நீ அத்தானின் நிறுவனத்திற்கு, வேலைக்கு செல்வதற்கு எந்தவித நேரக்கட்டுப்பாடும் இல்லாது, இரவு பகல் என்று பார்க்காது, சனி, ஞாயிறு என்று பார்க்காது, சென்று வருவதற்கு, பூரண அனுமதி தந்திருந்தார்.

அவவிற்கு நீ கூறிய சில விடயங்களை நான் அறிந்திருந்தேன். அத்தான் பாவம் தனியாக நிறுவனத்தை நடத்துகின்றார். அவரிற்கு உதவியாக நான் இருக்க வேண்டும் என. அந்த நேரத்தில் வருகின்ற குடும்ப பொறுப்புக்கள் அனைத்தையும், மனைவி சுகிர்தா கணவனை தொந்தரவு செய்யாமல், தனது பிள்ளைகளுடைய வேலைகள் அனைத்தையும், தானே மேற்கொண்டு வந்தார். நீ ஆடம்பர வாழ்க்கையை வாழக்கூடிய ஒரு நிலையில் இருந்தும், எளிமையான வாழ்க்கையையே நீ வாழ்ந்து வந்தாய். உனது இரண்டு பிள்ளைகளும் திருகோணமலை மாவட்ட பிரபலமான பாடசாலையில், கல்வி கற்க வேணடுமென நீயும், உனது மனைவியும் ஆசைப்பட்டீர்கள். அதையும் உனது முயற்சியால், பெற்றுக்கொண்டாய். இப்படி வாழ்ந்து வந்த நீ உனது அன்பான மனைவி, அன்பான குழந்தைகள் அன்பான சகோதர்கள், அன்பான மாமா, மாமி. மச்சான் உன்னோடு கடமை புரிந்த எனைய உத்தியோகத்தர்கள் அனைவரையும், ஆளாத்துயரில் விட்டுச்சென்றுள்ளாய். நீ இந்த மண்ணுக்கும், எங்களுக்கும் செய்த நன்மைகளுக்காக உனது ஆத்மா சாந்தியடைய பிராத்திக்கின்றோம்.

**றோயல் கொன்ஸ்ரக்ஷன் உரிமையாளரும்**
**உத்தியோகத்தர்களும்,**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நட்பு

கண்கள் கலங்குகிறதே
காற்று வீச மறுக்கிறதே
உன் மறைவுச் செய்தி கேட்டு
நெஞ்சு வெடித்து விடும்
போல் இருக்கிறதே
நேற்று வரை வாழ்ந்த
வாழ்க்கை இன்று
பாரை விட்டு போனதேனோ?

கதறி அழும் - உன்
உறவுகளுக்கு யார் இனி
ஆறுதல் சொல்வார்
மீண்டும் உன் வரவை
எதிர்பார்த்து
ஏங்குகிறோம்.
கண் திறந்து பாராயோ?
கவலைகள் தான் தீராதோ?.

**குமுழமுனை மக்கள்**
**முல்லைத்தீவு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழிநீர் அஞ்சலி

உங்கள் நினைவுகளை
எம்முள் தந்துவிட்டு
விழிகளையேன் மூடிக்கொண்டீர்கள்?

பார்த்தவர்கள், பழகியவர்கள்
இணைந்தவர்கள், அணைத்தவர்களின்
கண்களுக்குள்ளும் நீர் முட்டி
வழிகிறது நிஜமாகவே!

கண்களுக்குள் நீர் சுரந்து கரைவழியே
வழிந்தோடும் இக்கணத்தில் உங்கள் பிரிவை
உணர மறுக்கின்றன எம் இதயங்களை.
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**அன்னாரின் பிரிவுத் துயரில் நாமும் பங்குகொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.**

**ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!**

**திம்பிலி கிராம அபிவிருத்திச் சங்கம்,**
**கோம்பாவில், 2ம் வட்டாரம்**
**திம்பிலி. புதுக்குடியிருப்பு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## - நினைவஞ்சலி -



மனிதத்தை மதித்தீர்
மானுடனாய் மிளிர்ந்தீர்

உங்களின் பிரிவு அது தந்த பெருந்துயர் இன்னமும் நெஞ்சினை வருடுகின்றதே. எட்டுப்பேரோடு பிறந்தீர். செல்வச் செழிப்போடு கல்வியும் கற்றீர் .

அப்பு, அம்மம்மா அரவணைப்பில் தாய் மாமன் பாசத்தில் தந்தை தாய் சகோதரங்களின் அன்பு பிணைப்பில் வளர்ந்து ஆளானீர்.

புதுக்குடியிருப்பில் தொழில் செழித்து இருந்தீர். குமுழ முனையில் வாழ்ந்த அம்மாவை மணந்தீர். எம்மை வளர்த்து ஆளாக்கினீர்.

குழந்தை பருவம் மாறாத எம்மை அழவும் வைத்தீர்களே அப்பா. கல்விச் செல்வம் எமக்கு தந்திட நோய் பிணி என்ற பாராது ஓடி ஓடி உழைத்தீர். அரும்பாடு பட்டீர்.

எவருக்கும் உதவுவதில் முன் நின்றீர். திருக்கோணமலை றோயல் மாமாவிடம் அருச்சுனனுக்கு எப்படி கிறிஸ்ணனோ அப்படி இருந்தீர்களே!

எவ்வேளையென்றாலும் உமக்கு வருத்தமே இருக்காது. இனிதாய் பேசுவீர். இயந்திரமாய் இயங்கிடுவீர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எக் காரியத்தையும் செய்வதற்கும் உமது வாயில் இல்லையென்ற சொல்லே இல்லையே.

எதையும் சாதிக்கும் அற்புதம் உம்மிடம் கண்டோம்.

அம்மப்பா அம்மம்மாவோடு மாமா அத்தையோடு மரியாதையாய் பழகுவீர். மருமக்கள் பெறா மக்களோடு நட்புடன் இருந்தீர். எல்லா உறவினர்களுடனும் அன்பாகப் பழகுவீர் மறந்தா போனீர்? எம்மை !

எந்த கஸ்டம் வந்தாலும் எம்மிடம் ஏதும் கூறாமல் செயல்படுவீர்.
கஸ்டம் என்பது எதுவென நாமறியோம். குடும்ப நல வேலைகள் அனைத்தையும் தம் தலையில் சுமந்தீர்கள் சுமைத்தாயானீர்களே.
எங்களுக்கு வழித்துணை யார் அப்பா? எப்போதும் எம்மோடு வருவீர்கள் தானே அப்பா !

சகோதரங்கள் மச்சான் மார்கள், மருமக்கள், செய்த உதவிகளை மறக்காமல் எப்போதும் பேசுவீர்கள். உறவுகளை மதிப்பில் நீங்கள் சிகரம். உமக்கு வந்தது என்ன? சுகயீனம் என்பது உமக்கு இல்லையே!!
எமக்கும் புரியாது தவிக்கின்றோம்.

எந் நாளிலும் உமது நினைவுகளோடு நம் வாழ்நாளில் நாம் வாழ சிவனின் திருப்பாதத்தில் அமர்ந்திருந்து ஆசி தருவீர்களே!
நாமும் உம்மை பிராத்திக்கின்றோமே.

**– மனைவியும் – மக்களும் –**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரத்துவ வாழ்வில் மகிழ்ந்து



பேத்தி
வள்ளிநாயகம்



பேரன்
சின்னத்துரை



மாமன்
சௌந்தரராசா



அன்னை
தனலெட்சுமி



தந்தை
பரராஜசிங்கம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மரணத்திற்குப் பின்

வாழ்க்கையின் முடிவு மரணம் என்பது அனைவரும் அறிந்த விடயம் மரணத்திற்குப் பின் என்ன? என்பதை யாரும் அறிவதில்லை.

விஷய ஞானம் இல்லாத இடத்தில் பயம். பீதி முதலிய மனக் கஷ்டங்கள் தோன்றுவது சகஜம்.

மரணம் என்று நினைக்கும் பொழுது மரணத்திற்குப் பின் என்ன நிகழ்கின்றதென்ற சரியான அறிவில்லாததால் மரணம் பயம் உண்டாகின்றது.

மரணம் என்பது ஜீவனைப் பொறுத்தவரையில் புதிய சக்தியும் உற்சாகமும் புது ஆற்றல் திறமையும் உயிரில் உருவாகும் ஒரு புனிதமான நிகழ்ச்சி

பகல் முழுவதும் உழைத்துக் களைப்படைந்தவர் களுக்கு இரவு உறக்கம் களை தீர்த்துப் புத்துணர்வும் தெம்பும் அளிப்பது போன்று வாழ்நாள் முழுவதும் பல துறைகளிலும் செயலாற்றி வாழ்வில் களைப்படைந்த மனிதர்களுடைய ஜீவன் சுயமாகவே ஏற்றெடுத்த ஒரு தீர்க்க கால உறக்கம் அல்லது ஓய்வுதான் மரணம்.

பழுதடைந்த உடையை மாற்றிப் புது உடை அணிவது போன்று ஜீவன் தனது இலட்சியத்தை அடையும் வரையும் பழுதடைந்த சரீரத்தை மாற்றிப் புது சரீரத்தில் நுழைய வேண்டியிருக்கின்றது.

மரணத்திற்குப் பின் உயிர் என்ன நிலையடைகின்ற தென்பதைப் பற்றி இந்து சமய சாஸ்திரங்கள் விளக்கம் தருகின்றன.

கண்ணுவன்.கபிலன் போன்ற மகா ரிஷிகளின் பரிணாம சித்தாந்த சாஸ்திரங்களில் இது விஞ்ஞான பூர்வ மாகத் தெளிவு படுத்தப்பட்டிருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நசிகேதன் நமனைக் குருவாக ஏற்பதற்குரிய காரணம், மரணத்திற்குப் பின் ஜீவனுடைய நிலையை அறிவதற்குரிய பெரும் அவாதான் என்பதை கடோப நிடதம் கூறுகின்றது.

ஒரு நோயாளி நோயைக் குணப்படுத்துவதற்காக ஒரு வைத்தியரைச் சந்திக்கச் செல்கின்றான் பின்னர் சந்திக்க முடியாமல் திரும்பி வருகின்றான். மீண்டும். மீண்டும் செல்லும் பொழுதும் அதே நிலைதான்

மருத்துவரைச் சந்திக்கும் வரையும் வருத்தமுடையவர் நோக்கமாகையால் அது கைகூடும் வரையும் இவ்வாறு நிகழ்ந்து கொண்டிருக்கின்றது.

ஜீவன் சிவத்துடன் ஐக்கியப் படுவதுதான் பிறவியின் நோக்கம் என்ற காரணத்தினால் ஜீவன் சுத்த சிவநிலை அடையும் வரையும் பிறப்பு, இறப்பு என்பன நிகழ்ந்து கொண்டிருக்கும்.

உயிரைப் பற்றி சில அடிப்படைத் தத்துவங்களைத் தெரிந்து கொள்ளுப்பட்சத்தில் இவ்விஷயத்திலிருக்கும் பல சந்தேகங்கள் தீர்க்கப்பட்டு விடுகின்றன.

இந்து மத உயிரியல் சாஸ்திரப்படி சகல சராசரங்களும் உயிருடையன தூணிலும், துரும்பிலும் உயிர் ஊடுருவி நிற்கின்றது. மனிதனும் மனிதனுடைய நிழலும் போன்று உயிர் பரமாத்மாவின் பிரதி பாசம்

ஆகையால் உயிரை ஆக்கவும் அழிக்கவும் முடியாது உயிரை உண்டாக்க முடியாத காரணத்தால் ஒரு புதுச் சரீரம் உருவாகும் பொழுது நிலையான பழைய உயிரைத் திரும்பவும் சுவீகரிக்க வேண்டியிருக்கிறது.

பழைய உடல் அழிந்து புதுப் புது உடல் உருவாகிக் கொண்டிருப்பதாலும் என்றும் இருக்கின்ற உயிரை அழிக்கவும் ஆக்கவும் முடியாதிருப்பதாலும் மறு பிறப்பென்பது நிகழ்ந்து கொண்டேயிருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மரணம்**

ஒரு திரவத்தின் அடிப்படையான இறுதி அணுக்களிலிருந்து விசேஷ ரீதியில் உருவாகும் அலை நீளச் சபகை சக்தியே உயிரென்று நவீன அலைச் சித்தாந்த சாஸ்திரங்கள் கூறுகின்றன.

ஜீவன் தேகத்திலிருந்து பிரிவது (மரணம்) ஒரே நேரத்தில் ஒரே முறையில் நிகழ்வதில்லை. ஒரு குறிக்கப் பட்ட நேரத்திற்குள் இரண்டு தரமாக ஜீவன் பிரிந்து செல்கின்றது.

முதல் தாம் நிகழ்கின்ற மரணம் தைதீக மரணம் என்றும் இரண்டாம் முறை நிகழ்வது கோசீக மரணம் என்று சொல்லப்படும்

வெறும் சரீரத்திலிருந்துது மாத்திரம் உயிர் பிரிந்து சரீரம் செயலற்றுப் போகும் நிலைக்கு தைதீக மரணம் என்றும் இறுதியில் பஞ்ச கோசத்திலிருந்து உயிர் பிரிவதை கோசீக மரணம் என்றும் பஞ்ச கோசத்திலிருந்து முற்றாக ஜீவன் பிரிந்தாற்றான் உண்மையான மரணம் சம்பவிக்கின்றது என்றும் கூறப்படுகிறது.

தைத்க மரணத்திற்குப் பின் இரண்டு அல்லது மூன்று மணித்தியாலத்திற்குள் கோசீக மரணம் நிகழ்கிறது.

அபூர்வமாக சில சந்தர்ப்பங்களில் கோசீக மரணம் நிகழ்வதற்கு முன், சரீரத்திலிருந்து பிரிந்து நின்ற ஜீவன் திரும்பவும் சரீரத்தில் நுழைவதுண்டு.

இதைத்தான் இறந்தவர் திரும்பவும் உயிர் பெற்ற சம்பவமாகக் கேள்விப்படுகிறோம்.

எனவே சில சந்தர்ப்பங்களில் இவ்விதம் நிகழ்வதால் சரீரம் அதிகம் பழுதடையாத நிலையில் மரணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்பவிக்கும்போது, குறைந்தது ஆறு அல்லது எட்டு மணித்தியாலங்களின் பின்னர் தகனம் செய்வதுதான் உசிதமான தாகும்.

**ஞானம்**

முன் ஜென்மங்களைப் பற்றி அறிவதற்கு பரித்து வாஜ தர்சனம் என்ற ஒரு சாஸ்திரம் கிரந்தம் இன்றும் நடைமுறையில் இருக்கின்றது. இதை இதய சுத்தமுடைய வர்கள், நாலு ஆண்டுகள் அப்பியாசித்தால் தமது சொந்தப் பூர்வ ஜென்மங்களைப் பற்றியம், எட்டாண்டு பயின்றால் மற்றவர்களுடைய பூர்வ ஜென்ம விருத்தாந்தங்களைப் பற்றியும் அறியத்தக்க ஞானம் சித்திக்கும் .

அல்லது மூலாதார சக்தியை ஆதார சக்கரங்கள் வழியே சகஸ்ராரத்தில் ஏற்றி சிறுத்திப் பழகிய மகா யோகிகள், சித்தத்தில் அடங்கிக் கிடக்கும். பூர்வ ஜென்ம வாசனைகளில் சம்யமனம் செய்து பார்க்கும் பொழுது முன ஜென்மங்களைப் பற்றிய அறிவு கிடைக்கின்றது.

ஜீவன் பிறவி தோறும் செய்த தர்ம பலாலன்களுக்குத் தக்கபடி அடுத்தடுத்துப் பிறவிகளெடுத்துச் சுக துக்கங்களை அனுபவிக்கின்றது

முற்சென்மங்களிற் செய்த கர்ம பலன்களைப் பற்றி மனிதன் அறிவானாகில் பாப கர்மங்களைப் புரிவதற்கு அஞ்சி வாழ்வான்.

ஆகையால் பிறவி தோ்றும் வினையாற்றிக் களைப்படைந்த ஜீவன களையைத் தீர்த்துப் புத்துணர்வு பெறுவதற்காக மரணம் என்ற ஒரு இடைக்கால ஓய்வெடுப்பதைப் பற்றிச் சந்தோஷம் அடையாமல் பயப்படுவதேன்.?

**சுவாமி**

**கெங்காதரணாந்தா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீரிழிவு உணவும் உணவு பரிமாற்று அட்டவணையும்

(Diabetic Diet & Food exchange)

உணவு பரிமாற்று உட்டவணையானது நீரிழிவு நோயாளிக்கு பின்வரும் வழிகளில் உதவுகின்றது.

1. உணவு உள்ளெடுப்பதை கட்டுப்படுத்தல்
2. உணவின் முக்கியத்துவத்தையும் அதன் போசனை பெறுமானங்களையும் அறிந்து கொள்ளல்
3. உடல் நிறை மற்றும் குருதியின் குளுக்கோசின் அளவைப் பேணுவதில் உதவும்.

**பால் உணவு :-** (புரதம் - 3g காபோவைதரேற்று - 4g கொழுப்பு 4g மொத்த கலோரி - 65 kcal)

- பசுப்பால் - 100ml (1/2 கப் - Cup)
- ஆடை நீக்கியபால் - 200ml (1 கப் )
- ஆடை நீக்கிய பால்மா - 18g(5 தேக்கரண்டி)
- முழு ஆடை பால்மா - 13g(3 தேக்கரண்டி)

**இறைச்சி உணவுகள் :-** (புரதம் - 7.5 g கொழுப்பு - 6g மொத்த கலோரி 85 kcal)

- கோழி இறைச்சி - 75g
- ஈரல் - 75g
- மீன் - 75 - 100g
- முட்டை - 01
- பன்றி இறைச்சி - 75g



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கொழுப்பு உணவுகள் :-** (கொழுப்பு -10g மொத்த கலோரி 90 kcal)

- எண்ணெய் வகை - 10g (3 தேக்கரண்டி)
- நெய் - 10g (2 தேக்கரண்டி)
- பட்டர் - 12g (2 தேக்கரண்டி)
- மாஜரின் - 10g (2 தேக்கரண்டி)

**தானிய உணவுகள் :-** (புரதம் - 13g காபோவைதரேற்று 18 - 21 g மொத்த கலோரி 85 kcal)

- அரிசி - 25g (2 மேசைக்கரண்டி)
- சமைத்த அரிசி (சோறு) - கப் 150 g
- றவை - 25g (2 மேசைக்கரண்டி)
- கோதுமைமா - 25g (2 மேசைக்கரண்டி)
- அரிசி மா - 25g (3 மேசைக்கரண்டி)
- இட்டலி - 1
- தோசை சப்பாத்தி - 1
- உப்புமா - 1/2 கப்
- பாண் - 2 துண்டு
- உருளைக்கிழங்கு - 100g

**பழ உணவுகள் :-** (காபோவைதரேற்று10g மொத்த கலோரி 40 kcal)

- அப்பிள் - 1 சிறியது
- வாழைப்பழம் - சிறியது
- பேரீச்சை - 2
- திராட்சை - 20
- கொய்யாப்பழம் - 1 நடுத்தரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பலா - 2 துண்டுகள்
- மாம்பழம் - 1 சிறியது
- ஆரஞ்சி - 1 சிறியது
- பப்பாசி - 2" x 3" துண்டுகள்
- அன்னாசி - துண்டு

**காய்கறிகள் உணவுகள் :-** (1/2 கப் அவித்த மரக்கறி) காபோவைதரேற்று 6 % மொத்த கலோரிகள் 30 kcal)

- கோவா - முருங்கை
- பொன்னாங்காணி - வெண்டி
- முள்ளங்கி - அவரை
- கீரை - கத்தரி

## மூலிகை மருத்துவம்

| | | |
|---|---|---|
| 01. அரும்புல் பொடி | - | இரத்த சுத்தி |
| 02. அரசு | - | கர்ப்பக்கோளாறு |
| 03. அதிமதுரம் | - | மார்சளி நீங்க |
| 04. அமுக்ரா | - | சக்தி தரும் |
| 05. ஆடாதோடை | - | கோழை, இருமல் நீங்க |
| 06. ஓரிதழ் தாமரை | - | இதயம். பலம் பெற |
| 07. கடுக்காய் | - | மலச்சிக்கல் நீங்க |
| 08. கல்யாண முருங்கை | - | எடை குறைய |
| 09. கழற்சிக்காய் | - | விரை வீக்கம் நீங்க |
| 10. கீழா நெல்லி | - | குளிர்ச்சி, காமாலை |
| 11. சிறுகுறிஞ்சான் | - | சர்க்கரை வியாதி |
| 12. துத்தி | - | மூலம், இரத்த மூலம் |
| 13. துளசி | - | சைனஸ், சளி |
| 14. தும்பை | - | நஞ்சு, நஞ்சு நீக்கம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 15. தூதுவளை | - | காசம், இருமல், சளி |
| 16. நாவல் | - | நீரிழிவு நோய் நீங்கும் |
| 17. சிரியா நங்கை | - | தோல் வியாதி |
| 18. நெல்லி | - | பீனிசம், குளிர்ச்சி |
| 19. பொன்னாங்கண்ணி | - | பார்சை கூடும் |
| 20. மகா வில்வம் | - | கண்பார்வை, நீரிழிவு |
| 21. முடக்கத்தான் | - | இடுப்பு, மூட்டு வலி |
| 22. முருங்கை | - | இரத்த அழுத்தம் B.P |
| 23. வசம்பு | - | பித்தம், வாய் நாற்றம் |
| 24. வல்லாரை | - | நரம்பு பலம்பெற |
| 25. வாத நாராயணின் | - | வாதம் நீங்க |
| 26. வெந்தயம் | - | வெட்டை B.P |
| 27. வாழைத்தண்டு | - | கல்லடைப்பு |
| 28. கருவேப்பிலை | - | வயிற்றுளைச்சல் நீங்கும் |
| 29. மணத்தக்காளி | - | வாய்ப்புண், அல்சர் |
| 30. அம்மான் பச்சரிசி | - | தாய்ப்பால் அதிகரிக்கும் |
| 31. ஆடுதிண்டான்பாலை | - | பலம் உண்டாகும் |
| 32. குப்பைமேனி | - | மார்புச்சளி, தோல்நோய் |
| 33. கோரைக்கிழங்கு | - | புத்திக்கூர்மை |
| 34. நீர் பரம்பி | - | கோழை அகற்றும் |
| 35. பிரண்டை | - | பசிதூண்டி |
| 36. முசுமுசுக்கை | - | சளியைக் கரைக்கும் |
| 37. முக்கரட்டை | - | சிறுநீரக கோளாறு நீங்கும் |
| 38. மஞ்சள் கரிசலாங்கண்ணி | - | சிறுநீரில் இரத்தம் குணமாகும் |
| 39. வெற்றிலை | - | பசியின்மை |
| 40. பழங்கள் | - | குடல்புண் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர் இரத்த அழுத்தம்

இன்று பலருக்கு உயர் இரத்த அழுத்தம் இருப்பது இயல்பாகி விட்டது. உயர் இரத்த அழுத்தத்தைக் கவனிக்காமல் விட்டு விட்டால் இரத்தநாள அடைப்பு இதயநோய் சிறுநீரக நோய் போன்றவைகள் தோன்றுகின்றன. மன இறுக்கம், மன உளைச்சல், பதட்டங்கள் இரத்த அழுத்தத்தை தற்காலிகமாக உயர்த்துகின்றன.

இரத்த இழுத்தம் தொடர்ந்தால் கண்களிலுள்ள விழித்திரையின் இரத்த நாளங்கள் பாதிப்படைகின்றன பின்வரும் தகவல்கள் தங்களுக்குப் போதுமான விழிப்புணர்வை உண்டாக்கும் என நம்புகின்றோம்.

- நோய்யறிகுறிகளை கவனமாகப் பார்த்தல்
- தேவையான மருத்துவம்
- உடல் எடையைக் கட்டுப்பாட்டுடன் வைத்துக் கொள்ளல்
- உங்கள் உணவு முறையில் கவனமாக இருத்தல்
- நார்பொருள் நிறைந்த காய்கறிகளை அதிகமாகவும், அசைவ உணவுகளைக் குறைவாகவும் உண்டு வாருங்கள்
- உணவில் உப்பு,எண்ணை,சேர்ப்பதைக் குறைத்துக் கொள்ளுங்கள்
- மதுபாணங்கள் அருந்தலாகாது
- புகைப்பதை அறவே விட வேண்டும்
- ஒழுங்கான நடை தேகப்பயிற்சி தேவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கை

**முதல் பாகம்**

கனவு நுரைக்கும் கண்கள்
காற்றின் சுதந்திரம்

தொட்டுப் பார்க்கப் பறவைகள்
பட்டுத் தோல் நாய்க்குட்டிகள்

கொஞ்சம் பிசாசுக் கதைகள்
சிறகு முளைத்த குதிரைக் கனவுகள்

திட்டாத மாதா
அடிக்காத பிதா
கிள்ளாத குரு

தலைபுதைத்துறங்கப் பாட்டிமடி
மீதிச்சில்லறை கேட்காத தாத்தா
ஆசைத் தின்பண்டம்
அத்தைமார் முத்தம்

**இரண்டாம் பாகம்**

இருளின் நிறத்தில்
ஒளி கொண்ட மீசை

இஸ்திரிபோட்ட மேகம் போல்
உடம்பில் படியும் உடை

அதிகாலைத் தூக்கம்
அடிக்காத அலாரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகாய்க் காட்டும் கண்ணாடி
கதவில்லாத குளியலறை

ஜன்னலுக்குள் மூக்குநுழைத்துக்
கிளைகளும் தலையாட்டிப்
பாடம் கேட்கும் வகுப்பறை

ஒரு முறை பயின்றால்
உள்வாங்கும் மூளை

தோல்விக்கான காதல்
ஒன்றிரண்டு

வெற்றிக்கான காதல்
ஒன்று

சேமிக்கும் உத்தியோகம்
செலவழிக்காத இளமை
இரைச்சலற்ற கல்யாணம்

**மூன்றாம் பாகம்**

சுயாட்சியான தாம்பத்யம்

மல்லிகைப்பூச் சூட்டமால்
புரிந்துகொள்ளும் மனைவி

உப்புமூட்டை சுமக்க
ஓரிரண்டு பிள்ளைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்கள் எண்ணுமுன்
விடைபெறும் விருந்து

சொந்தச்செலவில் பயணங்கள்

தான்செய்த தவறொன்றும்
செய்யாத பிள்ளைகள்

தனது சாயலில் பிறந்த பேரன்கள்

**நான்காம் பாகம்**

வளையாத கைத்தடி
வழுக்காத குளியலறை

செரிக்கின்ற உணவு
சீரகத் தண்ணீர்

உயரம் குறைந்த தலையணை
குறட்டை சகிக்கும் மனைவி
சிறுநீர் வந்து
அடிக்கடி முட்டாத ஆழ்தூக்கம்

இப்போது கன்னிகழிக்க
எப்போதோ வாங்கிய புத்தகங்கள்

அசையாப் பற்கள்
ஆடாத் தலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரியாத நாய்
பேத்திகளின் ஸ்பரிசம்

வைத்தியம் பார்க்கச் சொந்தப் பணம்

சுத்த சைவம்
சுடாத வெந்நீர்

சொல்லாத தவறுகள் சொல்லிச் சுவைக்கச்
பழைய தோழர்கள்

மரணத்தை வரவேற்று
விசிலடிக்கும் மனசு

அடங்கிய பின்னும்
சிரித்தமுகம்

பட்டியல் இதனில்
பாதியடைந்தால்
நீதான் ராஜா

பாதிக்கும் மேலென்றால்
சக்கரவர்த்தி

முற்றுமடைந்தால்
நீதான் கடவுள்

**கவிஞர் வைரமுத்து**
**பெய்யெனப் பெய்யும் மழை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மற்றும் சில கேள்விகள்

தொடங்கும் ஒவ்வொன்றும் முடிதல் திண்ணமெனில்
அண்டம் முடிவுறல் உண்டா இல்லையா?

உலகின் முதல் தாய்க்குப் பிரசவம் பார்த்து யார்?
பசைகாயாத பச்சைக்குழவி மூடிய கண்ணோடு
முலை சப்புகிறதே! கர்ப்பத்துக்குள் புகுந்து
கற்பித்தது யார்?

தேமொரு கூடென்றால் உள்ளே உயிர்ப்பறவை
வதிகின்ற இடமெதுவோ?

உணர்வுள்ள காலை மரணம் வரப்போவதில்லை
மரணமுற்ற காலை உணர்விருக்க போவதில்லை
சாவுகுறித்து அஞ்சுவதேன் சகோதரா?

பிறப்பில்லா ஒரு நாள் இறப்பில்லா ஒருநாள்
இனி என்று காண்பாயோ சூரியனே?

கேள்விகள் நல்லவை சூன்யத்தில் பூப்பூப்பவை
வாழ்வை சலிக்கவிடாதவை.

**கவிஞர் வைரமுத்து**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரத்தக் கொதிப்பு

இரத்தக் கொதிப்பு இருக்கிறது. ஆனால் எந்தத் தொந்தரவும் இல்லை. எதற்காக மருந்து சாப்பிட வேண்டும்? " என்று பலர் உதாசீனமாக இருந்து வருகின்றனர். வாகனங்களில் பிரயாணம் செய்யும் போது எதிர்பாராது ஏற்படும் விபத்து போல தங்கள் உடம்பிலும் ஒரு விபத்து நேரப் போகிறது. என்று இவர்கள் அறியாமையால் சிகிச்சை பெறாமல் இருந்து விடுகின்றனர்.

லேசான தலை சுற்றல் அல்லது ஏதோ ஒரு நோய்க்கு சிகிச்சை பெறும் போது எதேச்சையாக மருத்துவர் "உங்களுக்கு பிரஷர் அதிகமாக இருக்கிறது" என்று எச்சரிப்பார்.

இரத்த அழுத்தம் அதிகமானதும் தலை சுற்றும். குறைந்தாலும் தலை சுற்றும். இரத்த அழுத்தம் அதிகமாக ஆரம்பிக்கும் காலங்களில் அவ்வப்போது தலை சுற்றல் வந்து போகும். தலைவலி தூக்கமின்மை இருக்கும். உடம்பு சோர்வு வலியுடன் அடித்துப்போட்டாற்போல் இருக்கும். அடிக்கடி படுக்கைக்குச் செல்லலாம். ஓய்வெடுக்கலாம் போலத் தோன்றும்.

இரவில் படுத்து உறங்கும் போது நெஞ்சை அடைப்பது போல உணர்வு ஏற்பட்டு திடீரென்று எழுப்பி விடும். சிலர் மாரடைப்பு வந்து விட்டதோ என பயந்து விடுவார்கள். இ.சி.ஜி என்கோர்டியோ கிராம் பார்த்து ஒன்றுமில்லை என்றால் தான் நிம்மதியாவார்கள். சில சமயங்களில் வயிற்றுப் புண், வாயுத் தொந்தரவு கூட ஏமாற்றி விடுவதுண்டு. இரத்த அழுத்தம் என்பது நம் உடலில் உள்ள இரத்தக் குழாய்களின் சுருங்கி விரியும் தன்மையையும் இரத்தத்தில் உள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீர்மத் தன்மையையும் பொறுத்து மாறுபடும். இரத்தக் குழாய்கள் இரப்பர் குழாய்களைப் போல சுருங்கி விரியும் தன்மையுடையவை. ஆனால் வயது அதிகமாக இவை இரும்புக் குழாய்களைப் போல கடினமாக ஆரம்பிக்கும். எனவேதான் வயதுக்கேற்ப இரத்த அழுத்தமும் மாறுபடுகிறது. இரத்தக் குழாய் கடினத் தன்மை சில குடும்பங்களில் பரம்பரையாக தொடரும். இரததக் குழாய்களின் கடினத் தன்மையை அதிகமாகாமல் காக்க நாம் புகை பிடிக்கக் கூடாது பொடி போடக் கூடாது புகையிலை பான்பீடா போன்றவைகளை தவிர்க்க வேண்டும்.

சக்கரை வியாதி இருந்தால் அலட்சியமாக இருக்கக் கூடாது. சர்க்கரையின் அளவு இரத்தத்தில் அதிகமாக இருக்கும் போது இரத்தக் குழாய்களை கடினமாக்கி எளிதாக உடையச் செய்யும். இரத்தக் கொதிப்புக்கு முக்கிய காரணம் உடல் பருமன் உடல் பருமன். இருந்தாலே சர்க்கரை வியாதி இரத்தக் கொதிப்பு மூட்டுவலி என தொந்தரவு கொடுக்க ஆரம்பித்து விடும். இரத்தத்தில் கொழுநீர் அளவை அதிகமாக்கி ஆபத்தை உண்டாக்கி விடும் . நாற்பது வயதிற்கு மேல் நாவை அடக்க வேண்டும். புலால் வகைகள் எண்ணெய் பதார்த்தங்களை தவிர்க்க வேண்டும். கொழுநீர் இரத்தத்தில் அதிகமாக இருந்தால் இரத்த ஓட்டம் தடைப்படலாம். கொழுப்பு திவலைகள் ஒன்று சேர்ந்து கட்டி போல இரத்தக் குழாய்களில் அடைப்பை ஏற்படுத்தலாம். அடைப்பை ஏற்படுத்தும் இடம் மூளை இதயம் போன்ற முக்கிய உறுப்புகளாக இருக்கலாம்.

நன்றாக பேசிக் கொண்டு சுறுசுறுப்பாக இருந்தார் நெஞ்சு வலியென்று சொன்னார் அவ்வளவுதான் இறந்து விட்டார். மாரடைப்பாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலை சுற்றி மயக்கம் போட்டு விழுந்தார். மயக்கம் தெளிந்தபின் கைகால் வரவில்லை மூளையில் இரத்தக் குழாய் வெடித்து விட்டதாம்

கைகால் வீங்கி விடுகிறது இரத்தக் கொதிப்பால் சிறுநீரகம் கெட்டு விட்டதாம் !

இப்படி ஏதாவது ஒரு விபத்தை உண்டாக்கும் அபாயகரமான நோய் இரத்தக் கொதிப்பு. பொதுவாக இரத்தக் கொதிப்பு அதிகமாக டென்ஷனும் ஒரு காரணம். எதற்கும் கோபம் படபடப்பு உணர்ச்சி வசப்பட்டு பேசுதல் போன்ற செயல்களால் இருதய படபடப்பு ஏற்பட்டு இரத்த ஓட்டம் அதிகமாகும். இதுவே பிரஷரையும் அதிகமாக்கி விடுகிறது.

எனக்கு இரத்தக் கொதிப்பு இருக்கிறது. என பயந்து விடக் கூடாது நாம் நினைத்தால் அதிலிருந்து விடுபடவும் முடியும். வருமுன் காக்கவும் முடியும். நமது வயது நாற்பதுக்கு மேல் ஆகும். போது இரதத அழுத்தத்தை மருத்துவரிடம் அவ்வப்போது செக்கப் செய்து கொள்வது நல்லது.

இரத்தத்தில் கொலஸ்ட்ராவ் யூரியா. கிரியாடினின் போன்றவை சரியாக இருக்கிறதா என்று சோதித்துக் கொள்ள வேண்டும்.

மது மாமிசம் புகை பிடித்தலை அறவே நீக்க வேண்டும். அடிக்கடி உணர்ச்சி வசப்படக்கூடாது உணவில் உப்பின் அளவைக் குறைத்து விட வேண்டும். வெளியில் செல்லும் போது தலைசுற்றல் தலைவலி இருந்தால் உடனடியாக மருத்துவரை அணுகி ஆலோசனை பெற வேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரணச்சடங்கு வினா விடைகள் - 60

1. **மரணச்சடங்கு என்பது வேறு எப்பெயர்களில் அழைக்கப்படுகின்றது?**

சாவீட்டுக்கிரியை, செத்தவீட்டுக்கருமம், மரணக்கிரியை, பிரேதக்கிரியை. சவக்கிரியை, உத்திரக்கிரியை, அபரக்கிரியை என அழைக்கப்படுகின்றது.

2. **பொதுவில் அபரக்கிரியை என்று சொல்வதேன்?**

அபரம் என்றால் பிந்தியது. உடலைவிட்டு உயர் போனபின் செய்யப்படுவதென்பது பொருள்

3. **அபரக்கிரியை உறுப்புக்கள் எவை?**

பிரேதக்கிரியை, சாம்பல்அள்ளுதல், அந்தியேட்டி, மாசிகம், ஆண்டுத்திதி, திவசம் என்பனவாகும்

4. **மரணக்கிரியை செய்யத்தக்கவர் யார்?**

சைவக்குருக்கள், அவர் நல்லறவு, ஒழுக்கம், கிரியை விளக்கம், சிவபூசை, அக்கினி காரியம் உடையவராயிருத்தல் வேண்டும்.

5. **சாவது உடலா? உயிரா?**

சாவது உடல் தான். உயிர் அனாதியாக உள்ளபொருள். அது அழிவது இல்லை. பல பிறவிகளை எடுத்தெடுத்துச் செய்த வினைகள் எல்லாம் தீர்ந்த பின் சிவகதி சேர்ந்து இன்புற்றிருக்கும்.

6. **உயிர் வாழ்வில் மூன்று நிலைகள் இருப்பதாகச் செல்கிறார்களே?**

இம்மை - இவ்வுலகில் உடம்பெடுத்து வாழும் நிலை

மறுமை - இவ்வுடல் இறந்த பின் வேறு உடல் எடுத்து வாழும் நிலை

அம்மை - வினைத்தொடர்புகள் எல்லாம் நீங்கிய பின் சிவகதியில் இன்புறும் நிலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**7. உயிர் உடலை விட்டுப் பிரியும் போது எந்த உறுப்பால் வெளியேறும்?**

இந்த உடலுக்குக் கண்கள் இரண்டு, காதுகள் இரண்டு, மூக்குத்துவாரம் இரண்டு, வாய், மலசலவாசல், சலவாசல் ஆகிய ஒன்பது வாசல்கள் உள்ளது. இதில் ஏதாவதொரு வாயிலால் வெளியேறும். உயிர் வெளியேறும் போது அவதானித்தால் அந்த வாயிலில் அசைவு தெரியும்.

**8. உயிர் பிரியும் போது திருமுறைகள் பாடுவதேன்?**

உயிர் பிரியும் போது செய்யப்படுவது உக்கிராந்திக் கிரியை எனப்படும். உக்கிராந்தி என்றால் உயிர் கிளம்பிப் போதல் ஆகும். எல்லோருக்கும் விபூதிதாரணமும், சிவமூலமந்திர செபமும், திருமுறை பாராயணமும், விசேட தீட்சை பெற்றவர்களுக்குச் சிவபூசையும் செய்தல் வேண்டும். உயிர் சிவப்பேறு எய்துவதற்கு இது உபகாரமாகும்.

**9. இறந்த எல்லோருக்கும் இந்தக் கிரியைகள் பொருந்துமா?**

சமய தீட்சை பெற்றவர்க்கே இவை பொருந்தும், தீட்சை பெற்றவர்களே சைவசமயத்தவாவார். இக்காலத்தில் தீட்சை பெறாதோருக்கும் சவத்தில் வைத்துச் தீட்சை வைத்து மேற்படி கிரியைகள் செய்யப்படுகின்றன. சாதாரணமானவருக்கு 31நாளில் அந்தியேட்டி செய்யப்படும் அதுவரை துடக்கு உண்டு. விசேட தீட்சை, சிவபூசை உடையவர்களுக்குச் சவத்தில் வைத்தே அந்தியேட்டி செய்யப்படும். அவர்களுக்குப் பதினாறு நாட்கள் தான் துடக்கு உண்டு.

**10. மரணம் நிகழ்ந்ததை ஆலயத்துக்கு ஏன் தெரியப்படுத்த வேண்டும்.?**

மரணம் நடந்த இடத்திலுள்ள ஆலயத்தில் பூசை நடவாதிருப்பதற்கும் வணக்கர் வந்து சாவீட்டுக் கருமங்களைக் கவனிப்பதற்குமாகும். ஊரில் பிரேதம் இருக்கும் வரை அயலவர் எல்லோருக்கும் துடக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**11. எந்த இடத்தில் வைத்துச் சவக்கிரியை செய்தல் வேண்டும்?**

வீட்டு முற்றத்தில் அல்லது மயானத்தில் பந்தலிட்டு அதில் வைத்துச் செய்தல் வேண்டும்.

**12. இறந்தவுடன் கை, கால் விரல்களைக் கட்டுவதேன்?**

உயிர் போய்ச் சிறிது நேரத்தில் உடல் விறைத்துவிடும் விறைக்குமுன் உடலை நேராக வளர்த்திக் கைவிரல்கள், கால் விரல்கள், வாய் என்பவற்றை நேராக்கிக் கட்டி விட்டால் உடல் ஒழுங்காக இருக்கும் என்பதற்காகவே சீலைத்துணியால் கட்டப்படும், கிரியையின் போது அவை அவிழ்க்கப்படும்.

**13. சவம் வைக்கப்படும் இடத்தின் மேல் வெள்ளை கட்டுவதேன்?**

இதுவரை உடலை ஆதாரமாகக் கொண்டிருந்த உயிர் உடலை விட்டு வெளியேறியதும் ஆதாரமின்றி அந்தரப்படும். உயிர் தங்குவதற்காகவே புதிய தூய்மையான வெள்ளை கட்டப்படும்.

**14. தலைமாட்டில் நெய்விளக்கு ஏற்றுவதேன்?**

உடலைவிட்டு வெளியேறிய உயிர் இருட்டில் அலையாமலும் அது செல்லும் வழிக்குத் தெய்வீக ஒளி உண்டாகவும், சிவசிந்தனையை அந்த இடத்தில் உண்டாக்குவதற்குமாகும்.

**15. இறந்த இடத்தில் முப்பத்தொரு நாளும் விளக்கு, தண்ணீர்ச் செம்பு வைப்பதும் சில இடங்களில் உணவு படைப்பது ஏன்?**

உடலைப்பிரிந்து முப்பத்தொரு நாளும் அங்கு இருக்கும், அதன் பசி, தாகத்தைத் தீர்ப்பதற்காகவே இவை வைக்கப்படும்.

**16. மரண வீட்டில் பறை அடிப்பதேன்?**

மரணச் செய்தியை ஊருக்கு அறிவிப்பதற்காக, பேரிகைதாடனம் (பேரிகை - பறை, தாடனம் - அடித்தல்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று ஒரு கிரியையும் செய்வதுண்டு. கிரியை செய்யும் கரு இடத்தையும் பொருட்களையும் - சுத்தி செய்து பேரிகையில் மும்மூர்த்திகளையும் பூசித்து "எல்லா உலகுமுள்ள எல்லா உயிர்களும் நல்வாழ்வு வாழவும், கொடியோர் அடங்கவும் சகல செல்வங்களும் உண்டாகுக" என்ற பொருளுடைய மந்திரத்தைச் செல்லிப் பேரிகையை அடித்துக் கிரியைகளைச் செய்வோர். இது இப்பொழுது வழக்கத்தில் இல்லை.

**17. வீதியோரங்களில் வெள்ளைக் கொடி கட்டுவதேன்?**

துக்கத்தை வெளிக்காட்டுவதற்காக. சில இடங்களில் கறுப்புக் கொடி கட்டுவதும் உண்டு.

**18. மரணச் சடங்குகளில் தேவாரம், திருவாசகம் முதலிய திரு முறைகள் பாடக்கூடாதெனச் சிலர் கூறுகிறார்கள். இது சரியா?**

இது சில பிராமணர்களும், மூடர்களும் கூறும் தவறான கருத்து. மரணச்சடங்கில் சிவகும்பம் வைத்துச் சிவாக்கினி வளர்த்துச் சிவமந்திரம் சொல்லப்படுகிறதே. தமிழ் வேதமாகிய திருமுறைகள் பாடக்கூடாதென்பது எப்படிப் பொருந்தும். வடமொழி மந்திர நாதமும்தமிழ்மொழித் திருமுறைப் பண்களும் சூழலையும் மனங்களையும் தூய்மைப்படுத்துவதில் சமதையான தெய்வீகம் நிறைந்தவையே

**19. இறந்தவரின் உடலுக்கு அபிஷேகம்செய்வதேன்?**

சவத்தை தூய்மை செய்து சிவமாக்கும் பாவனை, மந்திர கிரியா பூர்வமாகச் சிவமாக்கப்பட்ட சிவகும்பத் தீர்த்தத்தால் அபிஷேகம் செய்வதால் சவமும் சிவமாகுந் தன்மை பெறும், ஆன்மாவும் தூய்மை பெறும். கிரியையின் போது வளர்க்கப்பட்ட சிவாக்கினி கொண்ட கொள்ளி வைத்துத் தகனம் செய்வதும் சிவமாகுந் தன்மை உண்டாவதற்கே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**20. மஞ்சள் கலந்த தண்ணீரால் நீராட்டுவது ஏன்?**

மஞ்சள் சிறந்த கிருமிநாசினி ஆதலால் சவத்தையும் சுற்றாடலையும் தூய்மை செய்வதுடன் மங்கலமாகவும் இருக்கும் என்பதற்காகவே.

**21. சவத்துக்கு உறவினர் கால் கழுவுவதேன்?**

உரிமைக்காரர் இறந்தவருக்கு இறுதியாகச் செய்யும் மரியாதை இது. கிழக்கு மாகாணத்தில் இந்த நடைமுறை உண்டு. யாழ்ப்பாணத்தில் காலில் பூ வைத்து வணங்கும் வழக்கம் உண்டு.

**22. வாய்க்கரிசி போடுவதேன்? வீட்டிலா மயானத்திலா?**

செத்தவர் பசி தாகத்துடன் செல்லக் கூடாதென்பதற் காகவும் இதுவரை காலமும் உணவு தந்தவருக்கு வாய் நிறைய அரிசி போடும் பழக்கம் உண்டு.

**23. கொள்ளிக்குடம் எடுப்பது யார்?**

தந்தைக்கு மூத்த ஆண் பிள்ளையும், தாய்க்கு இளைய ஆண் பிள்ளையும் செய்வர். ஏனைய ஆண் பிள்ளைகளும் இதில் பங்கு கொள்வர். ஆண் பிள்ளை இல்லா விடத்துப் பெண்பிள்ளைகளும் பிள்ளைகள் இல்லாவிடத்து மனைவிக்குக் கணவனும், கணவனுக்கு மனைவியும் செய்வார். இவர்கள் இல்லையெனில் உறவினர் செய்வர்.

**24. வத்துக்குக் கூறைச்சேலை வேட்டி சால்வை போடுதல் ஏன்?**

செத்தவர் இறுதியாத்திரை செல்லும் போது, வாழ்வில் அவர் அணிந்த ஆடைகளில் மிக உயர்ந்தவற்றை வருக்கு அணிந்து மங்கலமாக வழி அனுப்பும் மனத்திருப்திக்காகவும்.

**25. பிரேதம் எடுத்துச் செல்லும் போது தலையா காலா முன்பக்கம் இருக்க வேண்டும்.**

கால் பக்கம் தான் முன் செல்ல வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**26. பிரேதத்தின் தலை தெற்குப் பக்கம் இருக்கக் கூடியதாக வைப்பதேன்?**

இறந்தவரின் உயிர் செல்லும் திசை தெற்கு (தென்புலம்) ஆதலால் தலை தெற்கே வைக்கப்படும்.

**27. கடலையில் பிரேதத்தை எத்தனை முறை, எந்தப் பக்கமாகச் சுற்றி வர வேண்டும்?**

மூன்று முறை இடப்பக்கமாகச் சுற்றி வந்து தலைப்பக்கம் தெற்கே இருக்கக் கூடியதாக வைக்க வேண்டும். அபரக்கிரியையில் எல்லாம் இடமாகவே நடைபெற வேண்டும்.

**28. ஏன் இடப்பக்கமாகச் சுற்ற வேண்டும்?**

அபரக்கிரியை எல்லாம் வலம்மாறியே நடைபெறும். (பூர்வக்கிரியையில் வலமாகவும் அபரக்கிரியையில் இடமாகவும் நடக்கும்)

**29. ஏன் எல்லாக் கருமமும் மூன்றுமுறை செய்யப் படுகிறது?**

இந்தப் பிரபஞ்சத்தில் உண்மைப் பொருள்கள் பதி, பசு, பாசம் என மூன்று. ஆதலால் செய்யும் கருமங்கள் சரியாக நிறைவேறுவதற்கு மூன்றுமுறை செய்யப்படும். மூன்று முறையில் தான் யாவும் பூரணமாவது இயற்கை நியதி.

**30. பிரேதம் கொண்டு போகும் போது அரிசி. தேங்காய்த் துண்டுகள், மஞ்சள் கலவை அல்லது நெற்பொரி எறிந்து கொண்டு போவதேன்?**

பிரேதம் போகும் வழியில் எதிர்ப்படும் பேய்,பிசாசு, மற்றும் துர்த்தேவதைகளைத் திருப்திப்படுத்துவதற்காகவாம்.

**31. கடலையில் சவத்திலுள்ள நகைகள் அரைஞாண் கயிறு என்பவற்றைக் கழற்றுவதேன்?**

இவற்றை எரியவிடுவதால் அல்லது மண்ணுள் மூடுவதால் எவ்வித பயனுமின்றி வீணாகிவிடும் என்பதால் அவற்றை எடுத்து இறந்தவர் பெயரில் தானதர்மம் செய்வர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**32. பிரேதமேடை அமைத்து மூன்று பக்கம் குச்சு (உதைகட்டை) நடுவதேன்?**

எரியும் போது விறகு பொறிந்து விழாமல் இருப்பதற்காக.

**33. உடல் எரிக்கும் போது நெஞ்சாங்கட்டை வைப்பதேன்?**

உடல் எரியும் போது தசையும் கொழுப்பும் உருகி எரிய எலும்புகூடு மேலெழுந்து விடாமல் அமர்ந்து எரிவதற்காக.

**34. யார் நெஞ்சாங்கட்டை வைக்க வேண்டும்?**

இது இடத்துக்கிடம் வேறுபடும். மச்சான், மாமன், அல்லது மருமகன் வைப்பது பொதுவான வழக்கம்.

**35. கொள்ளி வைத்தவர் அடியழித்துக் கற்பூரம் கொளுத்திக் கும்பிடுவதேன்?**

இறந்தவர் சிவகதி சேர வேண்டும். என்று வணங்குதலாகும்.

**36. காடாற்றுதல் என்றால் என்ன? எப்படிச் செய்ய வேண்டும்?**

இதனைக் காடாற்றுதல், சம்பல் அள்ளுதல், அஸ்தி சங்சயனம் என்றும் சொல்வர் எரித்த மூன்றாம் நாள் எரித்த இடத்தின் சூடு ஆறக்கூடியதாத் தண்ணீர் ஊற்றிக் குளிரச் செய்து, நீறுபூத்திருக்கும் என்பு சாம்பலுக்கு அபிஷேகம் செய்து வழிபட்டே சாம்பல் அள்ளுதல் வேண்டும். ஒரு புதுப்பாத்திரத்தில் பால் விட்டு அதற்குள் கால், தொப்புழ், நெஞ்சு, முகம், தலை ஆகிய பகுதிகளிலிருந்து எலும்புகளையும் சாம்பலையும் எடுத்துப் போட்டு வெள்ளைத் துணியால் மூடிக் கொண்டு போய் ஆழமான (ஆறு, கடல், குளம்) தீர்த்தத்தில் இட வேண்டும்.

**38. எரிந்த சாம்பலை ஏன் புண்ணிய தீர்த்தத்தில் போட வேண்டும்?**

இல்லை, அது தீய சக்திகளுக்கு இடமாகிவிடும். தூரதேச புண்ணிய தீர்த்தங்களுக்குக் கொண்டு போகத் தேவையானால் எங்காவது பாதுகாப்பான இடத்தில் மண்ணில் தாழ்த்தி அல்லது மரத்தில் வைத்திருக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**39. மரண வீட்டில் எட்டு நாட்களுக்குச் சமைக்கக் கூடாது என்ற விதிமுறை உண்டா?**

அப்படி ஒரு விதி இல்லை. இறந்தவர் சார்பில் ஏற்பட்ட துக்கம் காரணமாக வீட்டில் சமைக்கக் கூடிய நிலைமை இருக்காது. உறவினர் நண்பர்களே உணவு கொடுப்பர் சில இடங்களில் அந்தியேட்டி வரை இந்த நிலை நீடிக்கும்.

**40. எட்டுச் செலவு என்பதென்ன?**

இது பத்ததிகளிலோ கிரியை முறைகளிலே இல்லாத ஒன்று, ஆனால் நடைமுறையில் உள்ளது. இறந்த எட்டாம் நாள் அவருக்கு விருப்பமான உண்பன, தின்பன, பருகுவன முதலான உணவுகளைத் தேடிப் படைத்துக் கும்பிட்டு இதில் ஒரு பகுதியை எடுத்துப்போய் முச்சந்தியிலே பேய், பிசாசு, இராட்சதர்களுக்காக் கழித்து விடப்படும். இது இரவில் தான் நடைபெறும்.

**41. அந்தியேட்டி 31ஆம் நாள் செய்வதேன்?**

உடலைவிட்டுப் பிரிந்து உயிர் 31 நாட்கள் அந்த இடத்தில் நிற்கும் என்பது சாத்திர உண்மை. 31 ஆம் நாள் கிரியையுடன் அது செல்ல வேண்டிய கதிக்குச் செல்லும். ஆதலால் இறுதியில் செய்யப்படுவதாகிய கருமம் இது ஆகும். (அந்திய - இறுதி இட்டி - கிரியை)

**42. அந்தியேட்டியில் செய்யப்படும் கருமங்கள் எவை?**

இறந்த 31ஆம் நாள் புண்ணிய தீர்த்தக் கரையில் பந்தலிட்டு அல்லது அங்குள்ள மண்டபத்தில் செத்தவரின் சரீரத்துக்குப் பதிலாகத் தருப்பையில் "பத்தலிகை" எனும் பிரதி பிரதேசதம் அமைத்து இறந்த சவத்தில் செய்தது போல மரணக்கிரியைகளான பிரதேசுத்தி தகனம், காடாற்றுதல் முதலான கருமங்கள் எல்லாம் நடைபெறும்.

**43. அந்தியேட்டியில் தொடர்ந்து செய்யப்படும் தத்துவபூசை என்பதென்ன?**

மண்டபத்தில் தென்கீழ்த்திசையில் 25 சதுர தண்டில் மிட்டு பஞ்சபூதங்களையும் அவற்றைச் சார்ந்த கலைகள் அதிதெய்வங்களையும் குறிக்கும் ஐந்து நிறப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொடிகளைப் பரப்பி (பிருதுவி- மஞ்சள், அப்பு - பச்சை, தேயு - சிவப்பு, வாயு - கறுப்பு, ஆகாயம் - வெள்ளை பூசிப்பதாகும். இதனால் இறந்தவருக்கிருந்த பஞ்சபூதத் தொடர்புகள் நீக்கப்படுகிறது. என்பது பொருள்.

**44. அந்தியேட்டியைப் பிராமணர்கள் செய்யலாமா?**

இல்லை. சவக்கிரியை செய்த சைவக்குருக்களே செய்தல் வேண்டும். தீட்சை, திருமணக்கிரியை சவக்கிரியை, அந்தியேட்டி ஆகியவற்றைச் செய்வது சைவக்குருமார் என்பதுதான் தமிழர் வழமை ஆரியர்கள் என்று தம்மைச் சொல்லிக் கொள்ளும் பிராமணர் கோயிற்கிரியைக்கே உரியவர். இப்பொழுது சில பிராமணர்கள் செய்தாலும் பொதுவாகப் பிராமணர் செய்வதில்லை.

**45. சுண்ணமிடித்தல் என்றால் என்ன?**

இது சுர்ணோற்சவம் என்று சொல்லப்படும். இறந்தவரின் உடலை அபிஷேகம் செய்து தூய்மையாக்கி, நல்ல ஆடை அணிவித்துக் கொண்டு வந்து பந்தலின் மேற்கருகில் வைத்த உரலில் மஞ்சளும் அறுகும் இட்டுத் திருப்பொற்சுண்ணம் பாடிக் கொள்ளிகாரகர் இடித்தல் வேண்டும்.

**46. கோயிலில் சுவாமிக்குச் சூர்ணோற்சவம் செய்யப்படுகிறதே சவத்துக்குச் செய்யலாமா?**

ஆம், இறந்தவர்குச் சிவமாந் தன்மையை உண்டாக்கிச் சிவகதி சேர்க்கும் நற்கருமமே இது இருப்போருக்கும் தெய்வீகச் சூழலை ஏற்படுத்தி மனநிறையைத் தருவதால் இது செய்யப்டுகிறது.

**47. வீட்டுக்கிரியை எனப்படுவன எவை?**

தீர்த்தக்கரையிலே அந்தியேட்டி முடித்து வீட்டில் வந்து செய்யப்படும் கிரியைகளாகும். நக்னதானம் சபிண்டீகரணம் வரையுள்ளவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**48. சபிண்டிகரணம் என்றால் என்ன? வீட்டுக் கிரியையைச் சபிண்டீகரணம் என்றும் சொல்வதேன்?**

உயிரைப் பிதிர்களுடன் சேர்த்தல் என்பது பொருள் அரிசி மா, தேன், தயிர், எள்ளு, கதலிப்பழம் என்பவற்றை நன்கு பிசைந்து நான்கு உருண்டைகளாக்கி வாழை யிலையில் நன்கு பிசைந்து நான்கு உருண்டைகளாக்கி வாழையிலையில் தர்ப்பை வைத்து அதன்மேல் பிதிர்வர்க்கத்துக்கு மூன்று மாதருவர்க்கத்துக்க மூன்று பிண்டங்களை வைத்து அவற்றின் கிழக்கே இறந்தவரைக் குறித்து ஒரு பிண்டம் வைத்து உரிய பூசை வழிபாடுகள் செய்ய எள்ளுந் தண்ணீரும் இறைத்து இறந்தவரின் பிண்டம் பிதிர்களின் பிண்டங்களுடன் சேர்க்கப்படம். இது இறந்தவரின் உயிரைப்பிதிரர்களுடன் சேர்த்துவிடும் கருமமாகும்.

**49. ஏகோதிட்டம் என்று ஒரு கிரியை செய்யப்படுகிறதே அது ஏன்?**

இறந்தவரின் உயிர் மறு உலகு செல்லும் வழியில் பசி தாகம் மற்றும் கஷ்டங்களை நீக்கும் பொருட்டு ஒருவருட கால வாழ்வுக்குத் தேவையான அனைத்துப் பொருட்களையும், ஒரு புரோகிதரில் இறந்தவரின் உயிரை ஆவாகனம் பண்ணிக் கொடுத்தலாகும். இந்தப் புரோகிதர் ஒரு வருடம் அல்லது ஆறு மாதத்திற்குத் தீர்த்த யாத்திரை போக வேண்டும்.

**50. இப்பொருட்கள் அந்த ஆன்மாவுக்கு உதவுமென்பதை நம்பலாமா?**

ஒரு இடத்தில் நடக்கும் காட்சியை விஞ்ஞான ஒலி, ஒளி அலைகளாக மாற்றி படமாக்கிப் பல ஆயிரம் கிலோமீற்றகருக்கப்பால் தொலைக்காட்சியின் திரையில் காட்டுகிறதே. இதை நம்புகிறோமல்லவா. மெஞ்ஞானத்தில் அருவமான உயிருக்கு இப்பொருட்கள் எல்லாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருவமாகி உதவும் என்பதை ஏன் நம்பமுடியாது விஞ்ஞானத்தில் அதற்குரிய சாதனங்கள் கருவிக் பயன்படுவது போல மெஞ்ஞானத்தில் மந்திர சக்தி பயன்படுகிறது எனக் கருதலாம்.

**51. இறந்தவருக்குச் செய்யப்படும் தான தர்மங்கள் எப்படி அவரின் உயிருக்கு போய்ச் சேரும்?**

இதுவும் முன் சொன்னது போன்றது தான். இவ்வுலகில் வாழும் போது தேவர்கள் நமது சேம நலன்களுக்கு உதவுவது போல மரணத்தின் பின் பிதிர்கள் என்போர் உதவுவர். பூர்வக் கிரியையில் தேவர்க்குப்பிரீதியாயும் அபரக்கிரியையில் பிதிரர்க்குப் பிரீதியாயும் பூசை வழிபாடு செய்வது இதனை உறுதிப்படுத்தும்.

**52. பிதிர்க்கடன் செய்வதேன்?**

இது சிரத்தையோடு செய்யப்படுவதால் சிரார்த்தம் எனப்படும். இறந்தவரின் ஆத்மா எந்த நிலையில் எங்கிருந்தாலும் அவர் பெயரில் செய்யப்படும் சிராத்தங்கள், தான தர்மங்களின் பயனை பிதிரர்கள் அவருக்கே சேர்ப்பிப்பர். அதனால்அவர் சாந்தியும், ஆன்ம ஈடேற்றமும் அடைவர். செய்யவருக்கு ஆசியும் வழங்குவார்.

**53. பஞ்சமி என்றால் என்ன? பஞ்சமியில் ஒருவர் இறந்தால் என்ன செய்ய வேண்டும்?**

அவிட்டம், பூசம், புரட்டாதி, உத்திரட்டாதி, ரேவதி ஆகிய ஐந்து நட்சததிரங்களில் ஒன்றில் இறந்தால் அவிட்ட பஞ்சமி என்பார்கள். இது பஞ்சமித்திதி என்பதல்ல. உண்மையில் தனிஷ்டா பஞ்சமி என்பதே அவிட்ட பஞ்சமிக்கென்று சாந்திக் கிரியையுண்டு. அதனை அந்தியேட்டிக் கிரியையின் பின் செய்ய வேண்டும். இல்லையேல் தொடர்புள்ள வேறு பலருக்கு மரணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரும் என்பது நம்பிக்கை, சாந்தி செய்யாமல் கோழிக்குஞ்சோ, முட்டையோ, கமுகம் பிள்ளையோ பெட்டிக்குள் வைத்துவிடுவது புத்தி பூர்வமானதல்ல. ஒரு உயிருக்காக வேறு உயிர்களை வதைப்பது சைவத்துக்குப் பொருந்தாது.

**54. ஆடி, புரட்டாதி, மார்கழி மாதங்களில் பிதிர்க்கடன் செய்வதேன்?**

இந்த மாதங்கள் பிதிர்கள் பூமியை நோக்கி வந்து தான தர்மங்களை கற்கும் காலம் என் ஞானியர்கள் சொல்லி வைத்துள்ளார்கள். ஆதலால் அக்காலங்கள் பிதிர்க்கடன் செய்ய உகந்தவை. ஆடி அமாவாசையும், புரட்டாதி மஹாளய பட்ஷமும் இதற்கு விசேட காலங்களாகும்.

**55. அகால மரணமடைந்தவரின் கிரியைகள் எப்படிச் செய்யப்பட வேண்டும்?**

தானாகத் தன் உயிரைப் போக்கிக் கொண்டவர்களுக்கும், விபத்தில் உடல் சிதைந்தவர்களுக்கும் சவக்கிரியை செய்வதில்லை. ஆறு மாதத்தின் பின் தர்ப்பையில் அவ்வுயிரை வருவித்துச் சவக்கிரியையும் அந்தியேட்டியும் ஒன்றாகச் செய்யப்படும்.

**56. தாய் தந்தையருக்கு எவ்வெக் காலங்களில் விரதமிருந்து பிதிர்கடன், தானதர்மங்கள், வழபாடுகள் செய்யுத்தகும்?**

பொதுவாகச் சிராத்தம் செய்யும் திதியிலும், தாய்க்குப் பூரணை காலங்களிலும், தந்தையருக்கு அமாவாசைக் காலங்களிலும் செய்வது தகும். தந்தையாம் தன்மையுமைய சூரியனின் கிரணங்கள் (கதிர்கள்) அமாவாசை காலத்திலும், தாயாந்தன்மையுமைய சந்திரனின் கிரணங்கள் பூரணையிலும் பூமியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாக்கத்தை உண்டாக்குவதால் பிதிர்கள் பூமியை நோக்கிவரும் காலமாகும். ஆதலால் தந்தைக்கு அமாவாசையும் ,தாய்க்குப் பூரணையிலும் உகந்தவையாகும்.

**57.கிடங்கு வெட்டுவதற்கு மூவர் மட்டும் செல்வதேன்?**

கிடங்கு வெட்டுவதற்கு மண்வெட்டி, அலவாங்கு, கோடரி ஆகிய மூன்று கருவிகள் தேவைப்படும். ஒவ்வொருவர் ஒவ்வொன்றுடன் போவதால் மூவர் செல்ல வேண்டும் எனும் வழக்கம் வந்திருக்கலாம்.

**58. கிடங்கில் மூன்று பிடி மண் போடுவதேன்?**

உரிமைக்காரர் பிரேதத்தின் தலை நெஞ்சு, கால் ஆகிய மூன்று இடங்களில் போட வேண்டும். ஆதலால் மூன்று பிடி மண் ஆயிற்று எனக் கொள்ளலாம்.

**59. துடக்கு என்றால் என்ன?**

துடக்கு என்றால் இறப்பு, பிறப்பு ருதுவதல் காரணமாக நிகழும் அசுகுசுப்பான தூய்மையின்மை அகப்புறச் சூழ்நிலையைக் குறிக்கும். சம்பந்தப்பட்டவரின் உடலிலிருந்து வெளிவரும் துர்நாற்றம் தொடர்பான திரவங்கள், கிருமிகள் முதலியவற்றால் உண்டாவதாகும். இறப்புக்காரணமாகத் தொடர்புடையவர்களுக்கு உண்டாகும் மனத்துயர், அதிர்ச்சி, அமைதியின்மை கவலைகள் மிகுந்த சூழ்நிலை துடக்கு எனப்படும்.

**60.ஆலயங்கள் விழாக்களுக்கு மரணமானவரின் உறவினர் செல்லலாமா?**

இல்லை, துடக்கு உரியவர்கள் துடக்கு கழிக்கும் வரை கோயிலுக்குப் போகக் கூடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

## அமரர்.
## பரராஜசிங்கம் வரதன்

எம் குடும்பத்தின் ஒளி விளக்காய் இருந்து எமக்கு நல்வழி காட்டி, வாழவைத்த எம் அன்பு தெய்வத்தின் மறைவுச் செய்தி கேட்டு நேரில் வந்து அஞ்சலி செலுத்தியும், பதாதைகள் , மலர்வளையம் காட்சிப்படுத்திய நிறுவனங்களுக்கும் அஞ்சலி பிரசுரம் வெளியிட்டவர்களுக்கும், தந்தியில் அனுதாபம் தந்தோருக்கும் தொலைபேசியில் ஆறுதல் கூறியும், இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டும் எமக்கு ஆறுதல் கூறிய உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் அனைத்து நெஞ்சங்களிற்கும் எம் இதயம் கனிந்த என்றும் மறவா நன்றியை நவில்கின்றோம்.

54, சமாது ஒழுங்கை
திருக்கோணமலை

- குடும்பத்தினர் -


• தொகுப்பாசிரியர் : சுந்தா (0756901316)

• அச்சு : ஏ.ஆர்.டிரேடர்ஸ் 0777695656



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ● வம்சம் - தந்தைவழி

**வம்**

**அமரர்.பரராஜச**

(அமரர்)
மாரிமுத்து + பொன்னம்மா

↓

(அமரர்)பரராஜசிங்கம்

↓

பிரபா
+
திருநாவுக்கரசு
↓
பிரதீபா + தர்மசேகர்
சர்மிளா + பிரதீப்குமார்
↓
விஷ்ணவி

பிரதீசன்
பிரியந்தி + பாஸ்கரநாதன் → திருபரன் - சனாதருண்
பிருந்தா
சிவரூபன்

ரூபா
+
ஸ்ரீஸ்கந்தராஜா
↓
சாலினி + சுதர்ஷன்
ராஜீவ்
ஸ்ரீசஞ்ஜீவ்
ஸ்ரீதாட்சாயினி

மோகன்
+
உமாஹரி
↓
பிரவீனா(அமரர்)
தனுபவன்

(அம
மனோ
+
இந்தி
↓
மயூர
அபிர
மயூரி

## ● வம்சம் - தாய்வழி

சௌந்தரராசா + சவுந்தரம்

↓

மயில்வேல் அழகன்
+
பகீரதாதேவி
↓
யதுர்சன்
அனஞ்சயன்

வசந்தி
+
சேரன்
↓
சிந்துயன்(பிரான்ஸ்)
சிந்துயா
சாரண்யா

சசிகுமார்
(M.S.S கொன்ஸ்ரக்ஷன்)

சுகிர்தா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ம்சம்

## ஜசிங்கம் வரதன்

(அமரர்)
சின்னத்துரை + வள்ளிநாயகம்

தனலெட்சுமி (அமரர்)

சுந்தரலிங்கம் + ஜெயலெட்சுமி

மரர்)
ாகரன்
+
ந்திரா
ரன்
பிராமி
ரி

(அமரர்)
கிருபாகரன்

(அமரர்)
வரதன்

சாந்தி
+
வரதராஜன்
டினோத்

(அமரர்) கீதா
+
ஜெகதீசன்
ரம்மியன்
தர்ஷன்
விதுர்ஷிகா

இளமாறன்
இசைவிழி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்



எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது
எது நடக்கிறதோ,
அது நன்றாகவே நடக்கிறது
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்
உன்னுடையது எதை இழந்தாய்?
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்?
அதை நீ இழப்பதற்கு?
எதை நீ படைதிருக்கிறாய்?
அது வீணாகுவதற்கு ?
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ
அது நாளை
மற்றொருவருடையதாகிறது
மற்றொரு நாள்,
அது வேறொருவருடையதாகும்.
இந்த மாற்றம் உலக நியதியாகும்.

இதுவே உலக நியதியும்,
எனது படைப்பின் சாராம்சமுமாகும்
-பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org